TNGTA NAMAKKAL

1 MAR 2019

கருக்கம்

உயர்கல்வி – கல்லூரிக் கல்வி – பல்வேறு பல்கலைக்கழகங்களின் கீழ் தற்போது இயங்கிவரும் 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றுதல் – முதற்கட்டமாக 1995–96–ஆம் ஆண்டு முதல் 2010–11–ஆம் ஆண்டு வரை தொடங்கப்பட்ட 14 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றம் செய்து தேவையான ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்களை தோற்றுவிப்பது – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.36

நாள் 28.02.2019.
ஸ்ரீவிளம்பி, மாசி–16.
திருவள்ளுவர் ஆண்டு, 2050.

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.342, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 02.05.1995.
2. அரசாணை (நிலை) எண்.335, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 18.12.2002.
3. அரசாணை (நிலை) எண்.167, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 09.05.2003.
4. அரசாணை (நிலை) எண்.329, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 12.09.2003.
5. அரசாணை (நிலை) எண்.365, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 02.11.2006.
6. அரசாணை (நிலை) எண்.366, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 02.11.2006.
7. அரசாணை (நிலை) எண்.374, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 11.09.2008.
8. அரசாணை (நிலை) எண்.308, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 15.09.2006.
9. அரசாணை (நிலை) எண்.258, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 17.08.2006.
10. அரசாணை (நிலை) எண்.295, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 03.09.2010.
11. அரசாணை (நிலை) எண்.394, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 27.12.2010.
12. அரசாணை (நிலை) எண்.394, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 27.12.2010.
13. அரசாணை (நிலை) எண்.394, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 27.12.2010.
14. அரசாணை (நிலை) எண்.394, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 27.12.2010.
15. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண் 23541/க்யூ2/2018, நாள் 11.07.2018 மற்றும் 06.12.2018

-----

ஆணை:–

01.06.2018 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

"தமிழ்நாட்டில் உள்ள 41 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் அனைத்தும் நடப்பு கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்படும். இதற்கென ஆண்டிற்கு 152.00 கோடியே 20 இலட்சம் ரூபாய் தொடரும் செலவினம் ஆகும்."

2. மேற்படி அறிவிப்பிற்கிணங்க, மேலே பதினைந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கல்லூரிக் கல்வி இயக்குநர் பல்வேறு பல்கலைக்கழகங்களின் கட்டுப்பாட்டின் கீழ் தற்போது உள்ள 41 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளும் 2018–19–ஆம் கல்வியாண்டு முதல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றப்படுவதனால், ஒட்டு மொத்த பணிப்பளு, மொழிப்பாடப்பிரிவுகள், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்கள் என்ற கணக்கீட்டின் அடிப்படையில், ரூ. 167.79 கோடி செலவினம் ஆகும் என்றும், தற்பொழுது செயல்பட்டு வரும் 41 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றுவதற்கு நிர்வாக அனுமதியும் மேற்காணும் செலவினங்களுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கியும், இதற்கென தேவைப்படும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்களை தோற்றுவித்தும் ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

(i) ஒரே வருடத்தில் 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றும் பட்சத்தில், அரசுக்கு கூடுதல் நிதிச் சுமை ஏற்படும் என்பதால் தற்போதுள்ள 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மூன்று கட்டமாக, (Phased manner) மூன்று ஆண்டுகளில், அரசு கல்லூரிகளாக மாற்றப்படும்.

(ii) முதற்கட்டமாக, 2018–19–ஆம் கல்வியாண்டில் தற்போது உள்ள 41 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் 1995–96–ஆம் ஆண்டு முதல் 2010–11–ஆம் ஆண்டு வரை தொடங்கப்பட்ட இவ்வாணையின் இணைப்பு 1–ல் கண்ட 14 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றம் செய்ய அனுமதியளிக்கப்படுகிறது. மீதமுள்ள பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளை அரசு கல்லூரிகளாக மாற்றுவது குறித்து வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

(iii) மேற்காண் 14 அரசு கல்லூரிகளுக்கு, ஒவ்வொரு கல்லூரிக்கும் 1 முதல்வர், 1 உடற்பயிற்சி இயக்குநர் மற்றும் 1 நூலகர் என்ற விகிதத்தில் 14 முதல்வர், 14 உடற்பயிற்சி இயக்குநர் மற்றும் 14 நூலகர் என ஆகமொத்தம் 42 பணியிடங்களுக்கும் ஆண்டொன்றிற்கு ரூ.4,53,57,648/– செலவில் நிர்வாக அனுமதி அளிக்கப்படுகிறது.

(iv) மேற்காண் 14 கல்லூரிகளுக்கு தேவைப்படும் 777 ஆசிரியர் பணியிடங்களை ஆண்டொன்றிற்கு ரூ.58,64,14,332/– செலவில் தோற்றுவிக்க நிர்வாக அனுமதி அளிக்கப்படுகிறது.

(v) மேற்காண் 14 கல்லூரிகளுக்கு ஒவ்வொரு கல்லூரிக்கும் 1 நிதியாளர், 1 கண்காணிப்பாளர், 2 உதவியாளர், 2 இளநிலை உதவியாளர், 1 உதவி செய் நிரலர் (Assistant Programmer), 1 தட்டச்சர் மற்றும் 2 அலுவலக உதவியாளர் என்ற விகிதத்தில் 14 நிதியாளர், 14 கண்காணிப்பாளர், 28 உதவியாளர், 28 இளநிலை உதவியாளர், 14 உதவி செய் நிரலர் (Assistant Programmer), 14 தட்டச்சர் மற்றும் 28 அலுவலக உதவியாளர் என ஆகமொத்தம் 140 ஆசிரியரல்லா பணியிடங்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.5,23,69,800/– செலவில் நிர்வாக அனுமதி அளிக்கப்படுகிறது.

(vi) ஒவ்வொரு கல்லூரிக்கும் ஆசிரியரல்லா பணியிடங்களில் 2 இரவுக் காவலர், 1 துப்புரவாளர் மற்றும் 1 பெருக்குபவர் பணியிடங்கள் வெளிமுகமை (Out sourcing) மூலம் நிரப்புவதற்கு கல்லூரிக்கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.



REDMI NOTE 5 PRO
MI DUAL CAMERA

vii) மேற்காண் 14 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் தற்போது பணிபுரிந்து வரும் முறையான (regular) ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்கள் முறையே அவர்கள் சார்ந்த பல்கலைக்கழகங்களின் துறைகள் மற்றும் நிர்வாக பணியிடங்களில் தக்க வைக்கப்படுவார்கள். இப்பணியாளர்கள் பல்கலைக்கழகங்களில் காலிப்பணியிடம் ஏற்பட்டு திரும்ப எடுத்துக் கொள்ளும்வரை சார்ந்த அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணி மாறுதல் அடிப்படையில் (Deputation) பணியாற்றுவார்கள். புதிதாக மாற்றப்படும் 14 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் அரசால் நிரந்தரப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படும் வரை தற்காலிகப் பணியாளர்கள் அப்பணியிடங்களிலேயே தற்காலிக அடிப்படையில் பணிபுரிய அனுமதி அளிக்கப்படுகிறது. இதுகுறித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள சார்ந்த பல்கலைக்கழக பதிவாளர்கள் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. மேற்படி செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

(i) ஆடவர் கல்லூரி

2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக் கழக கல்வியும் உயர் கல்வியும்–103 அரசு கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் மாநிலச் செலவினங்கள் – AA கலைக் கல்லூரிகள் (ஆடவர்) –01 சம்பளங்கள் ( த.தொ.கு 2202–03–103–AA – 0109 )

(ii) மகளிர் கல்லூரி

2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக் கழக கல்வியும் உயர் கல்வியும்–103 அரசு கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் மாநிலச் செலவினங்கள் – AB கலைக் கல்லூரிகள் (மகளிர்) – 01 சம்பளங்கள் ( த.தொ.கு 2202 – 03 – 103–AB– 0107 )

5. மேற்காண் 14 கல்லூரிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்களின் விவரங்கள் இணைப்பு II-ல் கண்டவாறு அமையும்.

6. இவ்வாணை நிதித்துறையின் அசா. எண் 9162/கல்வி–I/2019, நாள் 28.02.2019–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகப் பதிவாளர்கள்,
சம்பந்தப்பட்ட மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்குநர்கள் (கல்லூரிக்கல்வி இயக்குநர் வழியாக)
சார்ந்த கல்லூரி முதல்வர்கள் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18.

சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–1/8/15/35.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
சார்ந்த கருவூல அலுவலர்.
நகல்:–
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
உயர்கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், உயர்கல்வித் துறை, சென்னை–9.
நிதித் (கல்வி–I / வ.செ.பொது–I / வ.செ.பொது–II / சி.எம்.பி.சி.) துறை, சென்னை–9.
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

28/2/19

பிரிவு அலுவலர்

## இணைப்பு—I

**அரசாணை (நிலை) எண்.36, உயர் கல்வித் (ஜி1) துறை, நாள். 28.02.2019**

| வ. எண் | பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியின் பெயர் | அரசுக் கல்லூரியாக மாற்றம் செய்யப்பட்ட கல்லூரியின் பெயர் |
|---|---|---|
| 1. | அன்னை தெரசா பல்கலைக்கழக பெண்கள் உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம். | அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (பெண்கள்), கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம். |
| 2. | மதுரை காமராஜர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம். | அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டம். |
| 3. | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம். | அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தான்குளம், தூத்துக்குடி மாவட்டம். |
| 4. | பாரதியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கூடலூர், நீலகிரி மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கூடலூர், நீலகிரி மாவட்டம். |
| 5. | பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர், பெரம்பலூர் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெரம்பலூர், பெரம்பலூர் மாவட்டம். |
| 6. | பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம். | அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம். |
| 7. | பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, லால்குடி, திருச்சி மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, லால்குடி, திருச்சி மாவட்டம். |
| 8. | பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேட்டூர், சேலம் மாவட்டம். | அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேட்டூர், சேலம் மாவட்டம். |
| 9. | பாரதியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வால்பாறை, கோயம்புத்தூர் மாவட்டம். |
| 10. | பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பென்னாகரம், தருமபுரி மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பென்னாகரம், தருமபுரி மாவட்டம். |

| | | |
|---|---|---|
| 11. | மதுரை காமராஜர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோட்டூர், தேனி மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோட்டூர், தேனி மாவட்டம். |
| 12. | பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம். |
| 13. | திருவள்ளுவர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம் மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவெண்ணெய்நல்லூர், விழுப்புரம் மாவட்டம். |
| 14 | திருவள்ளுவர் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தென்னாங்கூர், திருவண்ணாமலை மாவட்டம். | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தென்னாங்கூர், திருவண்ணாமலை மாவட்டம். |

மங்கத் ராம் சர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

28/2/19
பிரிவு அலுவலர்